காமம் அகற்றிய தூயனடி

ஓம் நமசிவாய

சிவன் · திருவருட்பா தொகுப்பு

காமம் அகற்றிய தூயனடி – சிவ
காம சவுந்தரி நேயனடி
மாமறை ஓது செவ்வாயனடி – மணி
மன்றெனும் ஞான ஆகாயனடி.

ஆனந்தத் தாண்டவ ராஜனடி – நமை
ஆட்கொண்டு அருளிய தேஜனடி
வானந்த மாமலை மங்கை மகிழ் வடி
வாளனடி மணவாளனடி.

கல்லைக் கனிவிக்கும் சுத்தனடி – முடி
கங்கைக்கு அருளிய கர்த்தனடி
தில்லைச் சிதம்பர சித்தனடி – தேவ
சிங்கமடி உயர் தங்கமடி.

பெண்ணொரு பால் வைத்த மத்தனடி – சிறு
பிள்ளைக் கறி கொண்ட பித்தனடி
நண்ணி நமக்கருள் அத்தனடி – மிக
நல்லனடி எல்லாம் வல்லனடி.

அம்பலத்து ஆடல் செய் ஐயனடி – அன்பர்
அன்புக்கு எளிதரும் மெய்யனடி
தும்பை முடிக்கு அணி தூயனடி – சுயஞ்
சோதியடி பரஞ்சோதியடி.